அப்புவின் அனுபவம்

எழுதியவர்: உஷாராணி சுப்பிரமணியம்
ஓவியர்: ஜேம்ஸ் டான்

ISBN 978-981-18-4715-8

பாலர் பள்ளித் தமிழாசிரியர்களுக்குரிய கலந்தாய்வரங்கம் (2022): அன்பளிப்பு

பெரிய புத்தகம் 2

ஆலோசகர்கள்

திருவாட்டி சாந்தி செல்லப்பன்
தமிழ்மொழி கற்றல் வளர்ச்சிக்குழுவின் செயற்குழு ஆலோசகர்
நிலைய இயக்குநர், உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம், கல்வி அமைச்சு

திருவாட்டி மும்தாஸ் முகமது காசிம்
தமிழ்மொழி கற்றல் வளர்ச்சிக்குழுவின் செயற்குழுத் தலைவர்
மூத்த உதவி இயக்குநர், தாய்மொழிகள் துறை, கல்வி அமைச்சு

முனைவர் எஸ். பி. ஜெயராஜதாஸ் பாண்டியன்
தமிழ்மொழி கற்றல் வளர்ச்சிக்குழு உறுப்பினர்
தலைமை முதன்மை ஆசிரியர் (தமிழ்மொழி), கல்வி அமைச்சு

முனைவர் சுப்புலெட்சுமி சிங்காரம்
வழிகாட்டு சிறப்பாய்வாளர், தாய்மொழிகள் துறை, கல்வி அமைச்சு

எழுதியவர்
திருவாட்டி உஷாராணி சுப்பிரமணியம்
மூத்த சிறப்பாய்வாளர் (தமிழ்மொழி), தாய்மொழிகள் துறை, கல்வி அமைச்சு

நூலாக்கக் குழுவினர்
திருவாட்டி கௌரி சத்தியமூர்த்தி
திருவாட்டி உஷாராணி குப்புசாமி
திருமதி அருள்மதி லெனின்
தமிழ்மொழி கற்றல் வளர்ச்சிக்குழுவின் செயற்குழு உறுப்பினர்கள்

© 2022 Tamil Language Learning and Promotion Committee

Ministry of Education, Singapore
MOE Building
1 North Buona Vista Drive
Singapore 138675

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted, in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the Tamil Language Learning and Promotion Committee, Ministry of Education, Singapore.

Published by Child Educational Co. Pte Ltd
Strictly not for sale.

ISBN 978-981-18-4715-8

அப்புவின் அனுபவம்

எழுதியவர்: உஷாராணி சுப்பிரமணியம்
ஓவியர்: ஜேம்ஸ் டான்



அப்பு தன் குடும்பத்தாருடன் ஆற்றில் குளித்துக்கொண்டு இருந்தது. அப்போது ...


நான் அண்ணனைப்போல் பெரியவனாகிவிட்டேன். அதனால், காட்டுக்குள் சென்று மற்றப் பிராணிகளைப் பார்க்க விரும்புகிறேன்.

அதிக தூரம் செல்லாதே, அப்பு. சீக்கிரம் திரும்பி விடு.
சரி, அம்மா. போய் வருகிறேன்.

அப்பு தனியே நடக்கத் தொடங்கியது.

அங்கே பாம்பு ஒன்று தன் சட்டையை உறித்துவிட்டு ஊர்ந்து சென்றது.

அப்பு சிறிது தூரம் சென்றது. வானத்தில் கிளிகள் கூட்டமாகப் பறந்து சென்றன. அப்போது கிளிகளின் இறகுகள் உதிர்ந்து தரையில் விழுந்தன.

அப்பு மேலும் சிறிது தூரம் சென்றது.

அங்கே அணில் ஒன்று பழத்தைத் தின்றுவிட்டு விதைகளைத் தரையில் போட்டது.

அப்பு களைத்துப் போனது. அது ஓய்வெடுக்கத் தன் குடும்பத்தார் இருக்கும் இடத்திற்கு வந்தது.

அப்பு, காட்டிலுள்ள மற்றப் பிராணிகளைப் பார்த்தாயா?


பார்த்தேன், அம்மா. காட்டில் உள்ள சில பிராணிகளுக்குப் பொறுப்பே இல்லை!
அப்பு, ஏன் அப்படிச் சொல்கிறாய்?


அப்பு, அவை அந்தப் பிராணிகளின் இயல்பு.